# உக்கிர யுத்தத்தால் தென்பகுதியில் கொந்தளிப்பு!


விலை ரூபா 4-50

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் ii | திருவள்ளுவர் ஆண்டு 2022 | ஆடி 13 | இதழ்: 168
யாழ்ப்பாணம் | திங்கட்கிழமை | 29-7-1991



28-7-1991


(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் அரச படையினர் பெருமளவில் கொல்லப்படுவதையிட்டு தென்பகுதியில் கொந்தளிப்பு ஏற்பட்டு வருகிறது.

தென்பகுதியில் உள்ள அரச படையினரின் வீடுகள், தினமும் மரண வைபவம் நடைபெறும் வீடுகளாக மாறிவருகின்றன.

தொடர்ச்சியான மரணங்களினால் படையினரின் உற

[4-ம் பக்கம் பார்க்க]

## கிழக்குப்பகுதியில் பெரும் தாக்குதலுக்கு புலிகள் ஆயத்தம்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் புலிகள் பெரும் தாக்குதலை நடத்தலாம் எனப் பாதுகாப்பு அமைச்சு படை முகாம்களுக்கு

(4 ம் பக்கம் பார்க்க)

## படை உயர் அதிகாரி அதிரடித்தாக்குதலில் பலி

[அம்பாறை]

அம்பாறையில் நேற்று புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதல் ஒன்றில் விசேட அதிரடிப்படையைச் சேர்ந்த உயர் அதிகாரி ஸ்தலத்திலே கொல்லப்பட்டார்.

ட்ரக் ஒன்றில் சென்று

(4ம் பக்கம் பார்க்க)

# ★ புல்லாவெளி பகுதி மோதலில் 5 கவச வாகனங்கள் தகர்ப்பு

# பெருமளவு ராணுவத்தினர் பலி!

(யாழ்ப்பாணம்)

**புல்லாவெளிப் பகுதியில் நேற்று விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்துக்குமிடையில் நடைபெற்ற கடும் மோதலில ஐந்து இராணுவ கவச வாகனங்கள் முற்றுகத் தகர்க்கப்பட்டதுடன், பெருமளவிலான இராணுவத்தினரும் கொல்லப்பட்டனர்.**

**விடுதலைப் புலிகளின் தரப்பில் 17 வீரவேங்கைகள் வீரமரணமடைந்துள்ளனர்.**

நேற்றுக் காலை 9-00மணிக்கு புல்லாவெளியிலிருந்து பாரிய கவச வாகனங்கள் சகிதம் இராணுவத்தினர் முன்னேற முயன்றபோது விடுதலைப்புலிகள் கடும்தாக்குதலை மேற்கொண்டனர்.

இத்தாக்குதலில் இராணுவத்தினரின் ஐந்து கவச வாகனங்கள் முற்றுகத் தகர்த்தெறியப்பட்டதுடன், பெருமளவிலான இராணுவத்தினரும் கொல்லபபட்டனர்

இத்தாக்குதலின் மத்தியில் இராணுவத்தினர் 500 மீற்றர் முன்னேறி வந்து, வாடியடிச் சந்தியில் நிலைகொண்டுள்ளனர். புலிகளின் கடும் தாக்குதலால் இராணுவம் மேலும் முன்னேற முடியாது அதே இடத்தில் நிற்பதும் குறிப்பிடத்தக்கது.

நேற்றுக் காலை 9 மணிக்கு ஆரம்பமான மோதல் மாலை 4 மணிவரை நடைபெற்றது.

## காவலரண் தாக்குதலில் 50வேங்கைகள் வீரமரணம்

[யாழ்ப்பாணம்]

ஆனையிறவு தடைமுகாமுக்கு அருகிலுள்ள குறிஞ்சாத்தீவு, உப்பள விடுதிகளில் உள்ள இராணுவ காவலரண்கள்மீது நேற்று முன்தினமிரவு விடுதலைப்புலிகள் மேற்கொண்ட திடீர்த்தாக்குதலில் 50 வீரவேங்கைகள் வீரமரணமடைந்துள்ளனர்.

லெப். கேணல் சரு, மேஜர் குகதாஸ் ஆகியோரும் மேற்படி மோதலில் வீரமரணமடைந்துள்ளனர்.

இவர்களுக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர். (வி)

## வீரவணக்கம்

[யாழ்ப்பாணம்]

ஆனையிறவில் நேற்று முன்தினம் இடம் பெற்ற மோதலில் வீரமரணமடைந்த நிருபன் (வேலாயுதம் பாலச்சந்திரன் கிண்ணியா), மொருஜி (அரசரத்தினம். அரவிந்தன், கட்டைப்பறிச்சான்) சுஜன் (கோபாலப்பிள்ளை புஸ்பராஜா, ஈச்சிலம்பற்றை), சசிம (ஜெகதாஸ் உரும்பிராய்) கேசிகன் [பரஞ்சோதிநாதன்

(4-ம் பக்கம் பார்க்க)

## வடபகுதி போர் குறித்து கொழும்பில் வதந்திகள்

[லண்டன்]

ஆனையிறவு யுத்தம்பற்றி அரசாங்கம் உண்மையான தகவல்களை பொதுமக்களுக்கு வழங்காவிட்டால் தென்னிலங்கையில் மக்களிடையே பெரும் பதற்றமும், கொந்தளிப்பும் ஏற்படும் சூழ்நிலை தற்போது உருவாகிவருவ

[4ம் பக்கம் பார்க்க]

## யுத்தமுனையில் விமானங்கள் 'அசிட்' வீசி தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

நேற்றுக் காலை கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி, முள்ளியான், புல்லாவெளிப் பகுதிகளில் அவ்ரோ விமானங்கள் எரிகுண்டுகளை வீசின. இதனால் அப்பகுதியில் பெரும் தீச்சுவாலைகள் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. அநேகமான குடிமனைகள், பற்றைக்காடுகள் தீப்பற்றி எரிவதாகவும் தெரிவிக்கப்பட்டது

இத்தாக்குதலின்போது நேபாம் எரிகுண்டுகள் வீசப்பட்டதுடன், அசிட் வகைகளும் வீசப்பட்டன. (56)

## ஆனையிறவு முகாமைக் கைப்பற்றுமாறு 'பிரபா' கடுமையான உத்தரவு

### கொப்பேகடுவ தகவல்

(மணிலா)

"ஆனையிறவு முகாமைக் கைப்பற்றவேண்டும் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. பிரபாகரன் தமது சகாக்களுக்குக் கடுமையான உத்தரவைப் பிறப்பித்துள்ளார்."

(4ம் பக்கம் பார்க்க)

## கனடாவில் தமிழ் ஒலிபரப்பு

[ரொறன்றோ]

கனடாவில் தேமதுரத் தமிழ்வானொலிநிகழ்ச்சி ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நடைபெற்று வருகின்றது.

இரவு பதினொருமணி தொடக்கம் பன்னிரண்டு மணிவரை நடைபெறும் இந்நிகழ்ச்சி ஒன்ராரியோ மாநிலத்தின் ரொறன்ரோ நகரத்திலிருந்து ஒலிபரப்பப்பட்டு வருகிறது.

## போர்விமானங்கள்இரைச்சல்

[யாழ்ப்பாணம்]

கட்டைக்காடு - வெற்றிலைக்கேணி - ஆனையிறவுபகுதிகளில் நேற்று முன்தினம் முதல் பலாலியிலிருந்து பொம்மர், அவ்ரோ-8, ஹெலிகொப்டர்கள் தீவிரமாகப் பறந்து சென்றன.

இடைவிடாது இவ்விமானங்கள் தொடர்ச்சியாக போவதும் வருவதுமாக இருந்ததால் இப்பகுதியிலுள்ள மக்கள் நிம்

[4ம் பக்கம் பார்க்க]

## வவுனியா பகுதியில் படையினர் துன்புறுத்தல்

[வவுனியா]

வவுனியா தடைமுகாம் தாண்டிக்குளம் பகுதி பேயாடிக் கூழாங்குளம் பகுதிகளில் பொதுமக்கள் மீது படையினரின் துன்புறுத்தல்கள் அதிகரித்திருப்பதாக தெரிவிக்கப்

(4-ம் பக்கம் பார்க்க)

## மீண்டும்ஊரடங்கு

(கொழும்பு)

யாழ் மாவட்டத்தில் காரைநகர் தவிர்ந்த ஏனையபகுதிகளிலும், முல்லைத்தீவு மாவட்டத்திலும் ஊரடங்குச்சட்டம் மீண்டும் அமுலுக்கு வந்துள்ளது.

(4-ம் பக்கம் பார்க்க)

## இலங்கை - இந்திய அமைச்சர்கள் புலிகள் நடவடிக்கை பற்றி பேச்சு

[கொழும்பு]

வடக்கு-கிழக்குப் பகுதியிலும், தமிழகத்திலும் விடுதலைப் புலிகளின நடவடிக்கை குறித்தே இலங்கை-இந்திய வெளிவிவகார அமைச்சர்கள் முக்கியமாக பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளனர்.

கொழும்பில் நேற்று வெளியுறவு அமைச்சகம் விடுத்த அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீவிர தாக்குதல்களை கட்டுப்படுத்த அமைச்சர் ஹேரத் இந்திய தரப்பிலிருந்து ஆலோசனைகளைப் பெறவும் முயற்சிப்பாரென எதிர்பார்க்கப்படுவதாகவும் கூறப்படுகிறது. (சி)

# நடைபெற்றுக்கொண்டிருக்கும் போரில் அனைவரும் இணைவதனால் விடுதலை கிடைக்கும்

(சித்தன்கேணி)

''நடைபெற்றுக் கொண்டிருக்கும் போராட்டத்தில் எல்லோரும் இணைவதன்மூலம் எமது விடுதலையை வெகு விரைவில் பெற்றுக்கொள்ள முடியும்'' என்று விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அரசியல் பொறுப்பாளர் மூர்த்தி சித்தன்கேணி பிள்ளையார் ஆலயத்தில் ஆனையிறவு இராணுவ முகாமைகைப்பற்றும் நோக்குடன் விடுதலைப் புலிகளினால் நடாத்தப்படும் யுத்தம் வெற்றி பெறவும், காயமடைந்த போராளிகள் பூரணசுகம் பெறவும வீர மரணம் அடைந்த போராளிகளின் ஆத்மசாந்திக்காகவும் நடைபெற்ற விஷேட அபிஷேக ஆராதனையில் கலந்து கொண்டு உரையாற்றும் போது குறிப்பிட்டார்.

இந்த விசேட அபிஷேக ஆராதனையில் பெரும் தொகையான பொதுமக்கள் கலந்துகொண்டனர். திரு. மூர்த்தி தொடர்ந்து கூறியதாவது: இன்று எமது மக்கள் போராட்டத்தையும் தம்மையும் வேறுபடுத்தி நடக்கின்றனர் இந்த நிலை முற்று முழுதாக மாறவேண்டும் எம்மைப் பொறுத்தவரையில் நாம் எந்நேரமும் இறப்பது நிச்சயம் ஆனால் யாருக்காக இந்தப் போராட்டத்தை நடாத்துகின்றோம் என்பதை நீங்கள் எல்லோரும் நன்கு உணரவேண்டும்.

இன்று எமது போராட்டத்தில் சுமார் ஐம்பதனாயிரம் போராளிகள்இணைந்திருப்பார்களானால் இன்று வடக்கு முழுவதும் எமது பூரணகட்டுப் பாட்டில் இருந்து வடதமிழ் ஈழத்தை பிரகடனப்படுத்தியிருக்கலாம்? அந்த நிலைமை இல்லை ஆதலால் வீட்டுகொரு வரை போராட்டத்திற்கு அனுப்பவேண்டியது அவசியமாகிறது.

போராட்டத்தை குறைந்த காலத்திற்குள் முடிக்கவேண்டுமென்றால் எல்லோரும் போராட்டத்தில் இணைய வேண்டும். தற்போது 30 வீதத்துக்கும் அதிகமானவர்கள் அடிமையாக வாழ்ந்து பணம் அனுப்புவதற்காக கனடா, பிரான்ஸ், லண்டன், சுவிற்சலாந்து, ஜேர்மனி போன்ற நாடுகளுக்கு சென்றுவிட்டனர். ஆனால் 10 வீதத்தினர் கூட இந்தசுதந்திரப்போருக்கு தங்களை அர்ப்பணிக்கவில்லை. உலகத்திலேயே போராட்டத்தில் நாம் மற்றவர்களை அதிர்ச்சியடையக் கூடிய நிலையில் முன்னேற்றம் அடைந்திருக்கின்றோம். ஆனால் அரசியல், சமூக போராட்டத்தில் எமது நிலைமை மிகக் குறைந்தே காணப்படுகின்றது. அரசியல், சமூக அறிவுகள் குறைவாக காணப்படுவதற்கு காரணம் எம்மை வழிநடத்திய அரசியல் வாதிகள் ஐந்தாண்டுக்கு ஒருமுறை வந்து தேர்தல் விழாக்களை நடாத்தி எமது வாக்குகளைப்பெற்று பாராளுமன்றம் சென்றவர்கள் எமது மக்களுக்கு அரசியலில் சரியான முறையில் வழிநடத்த தவறியதே. இந் நிலை இன்று மாறிவருகின்றது.

[137]

# வீர வேங்கைகளின் ஆத்ம பலத்திற்கு விசேட ஆராதனை

[யாழ்ப்பாணம்]

ஆனையிறவு மோதலில் விடுதலைப் புலிகள் வெற்றிபெற வேண்டி யாழ். கொட்டடிச் சிற்றாரவையின் ஆதரவுடன் வீரகத்தி விநாயகா தேவஸ்தானத்தில் பிரார்த்தனையும் அபிடேக ஆராதனையும் தொடர்ந்து ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நடைபெற்று வருகிறது.

இப்பிரார்த்தனை ஆனையிறவுப்போர் முடியும்வரை நடைபெறும் என்று அறிவிக்கப்படுகிறது.

* * *

[பண்டத்தரிப்பு]

பெரியவிளான் வடசேரி விக்கினேஸ்வரர் ஆலயத்தில் ஆனையிறவு முகாம் தாக்குதலின்போது வீரமரணமடைந்த வேங்கைகளுக்கு ஆத்மசாந்தி வேண்டியும காயமடைந்த போராளிகளுக்கு பூரணசுகம் வேண்டியும், போராட்ட களத்தில் தம்முடன் போராடி வரும் வேங்கைகளுக்கு ஆத்ம பலம் வேண்டியும் விசேட பூஷை, பிரார்த்தனை என்பன கடந்த வெள்ளிக்கிழமையன்று நடைபெற்றன. பெருந் தொகையான மக்கள் இதில் கலந்துகொண்டனர். [72]

* * *

[புலோலி]

நெல்லியடி முருகமூர்த்தி ஆலயத்தில் களத்தில் நிற்கும் போராளிகளுக்கு வெற்றி வேண்டியும், வீரமரணமடைந்த போராளிகளின் ஆத்மா சாந்தியடைய வேண்டியும் காயமடைந்த போராளிகள் குணமடைய வேண்டியும் விசேட அபிஷேகமும் நடத்தப் பட்டது.

இப்பூஜையும் அபிஷேகமும் இரண்டுநிமிட மௌன பிரார்த்தனையுடன் ஆரம்பமானது. (61)

* * *

[பண்டத்தரிப்பு]

ஆனையிறவு இராணுவ முகாம் தாக்குதலின்போது வீரமரணமடைந்த வேங்கைகளுக்கு ஆத்ம சாந்தி வேண்டியும், காயமடைந்த போராளிகளுக்கு பூரணசுகம் கிடைக்க வேண்டியும், போர்க்களத்தில் தீரமுடன் போராடும் வீர வேங்கைகளுக்கு ஆத்மபலம் வேண்டியும் பனிப்புலம் முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் நாளை 30-ம் திகதி செவ்வாய்க்கிழமை விஷேட அபிஷேகம், பூசைவழிபாடு என்பன நடைபெறவுள்ளன. (72)

* * *

[கொழும்புத்துறை]

கொழும்புத்துறை கிழக்கு ஆத்தியம்பதி அருள்மிகு ஸ்ரீ சந்திரசேகரர் விநாயகர் ஆலயத்தில் கடந்த 23-ம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை ஆனையிறவு இராணுவமுகாம் தகர்ப்புப் போரில் வீரமரணமடைந்த வீரவேங்கைகளின் ஆத்மா சாந்தியடையவும், போரில் காயமடைந்த வீர வேங்கைகள் விரைவில் பூரண சுகமடையவும், போர்க்களத்தில்போராடும்வீரவேங்கைகளுக்கு ஆத்மபலம் வேண்டியும் விசேட பூசைகள், வழிபாடு, பிரார்த்தனைகள் இடம்பெற்றன. [154]

* * *

[யாழ்ப்பாணம்]

தொல்புரம் மத்தி கொட்டடியம்பதி ஸ்ரீ ஆதிமுத்துமாரி அம்பாள் ஆலயத்தில், ஆனையிறவுப் போரில் வெற்றி வேண்டியும், காயமடைந்தபோராளிகள்நலம்பெற வேண்டியும், வீர மரணமடைந்த மாவீரர்களினதும், பொது மக்களதும் ஆத்மா சாந்தியடையவும் விஷேடஅபிஷேகமும், வீட்டுக்குஒரு பொங்கலும் அமைதிப் பிரார்த்தனையும் இன்று நடைபெறவுள்ளது.

* * *

[மானிப்பாய்]

நவாலி முருகமூர்த்தி கோவிலில போராளிகளின் வெற்றி வேண்டி விசேட பொங்கலும். பூசையும் இடம்பெற்றன.

ஆனையிறவில் தற்போது நடந்து கொண்டிருக்கும போரில் போராளிகள் வெற்றி பெற வேண்டியும் மறைந்த வீர வேங்கைகளின் ஆத்ம சாந்திக்காகவும் காயமடைந்த போராளிகள் விரைவில் குணமடையவேண்டியும் பூசை, வழிபாடுகள் நடைபெற்றன. [71]

* * *

[கிளிநொச்சி]

ஆனையிறவில் போரிடும் விடுதலைப்புலிளின் வெற்றிக்காகவும் தெய்வ அனுக்கிரகத்திற்காகவும், கிளிநொச்சி மாவட்டத்தில் இந்து கிறிஸ்தவ ஆலயங்களில் விசேடவழிபாடுகளும், பூசைப் பிரார்த்தனைகளும் சிறப்பாக இடம் பெற்றன.

முருகண்டி பிள்ளையார் ஆலயம் கிளிநகர் முருகன் ஆலயம் ஆகியவற்றிலும் இவ்வழிபாடுகளும் விசேட பூசைகளும் நடைபெற்றது. (83)

* * *

(பருத்தித்துறை.

வல்லை வயலூர் முருகன் ஆலயம், பருத்தித்துறை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயம், பருத்தித்துறை சாமுண்டீஸ்வரி ஆலயம், நெல்லண்டை பத்திரகாளி அம்பாள் ஆலயம் ஆகிய ஆலயங்களில் தற்போது நடைபெற்றுவரும் மாபெரும் யுத்தத்தில் வீரமரணமடைந்த தமிழீழ வீர வேங்கைகளின் ஆத்ம சாந்திக்காகவும், காயமடைந்த போராளிகள் பூரணசுகம்பெற வேண்டியும், களத்தில் நின்று போராடும்வீரவேங்கைகளுக்கு ஆத்ம பலம் வேண்டியும் விசேட பூசைகள், இலட்சார்ச்சனைகள் ஆராதனைகள் பஜனைகள் என்பன இடம்பெற்றன. (52)

## இராசி பலன்

**29 - 07 - 1991**
**(தமிழ் திகதி ஆடி 13)**
**திங்கட்கிழமை**

திருதியை பி. இ. 3-52வரை சதயம் நாள் முழுவதும், சித்த யோகம், இராகுகாலம் காலை 7-33 முதல் 9-03 வரை, சுப நேரம் பகல் 12-03 முதல் 1-33வரை.

மேடம்: வித்தை விருத்தி, பணவரவு, மனச்சந்தோஷம்.

இடபம்: தொழில்லாபம். தூரத்து உறவு, மனைவியால் பெருமை.

மிதுனம்: வாக்குவாதம், தொழில்துறை அலைச்சல், வெறுப்பு.

கடகம்: பணத்தகராறு, மனமுடை, குடும்பப் பிரிவு.

சிங்கம்; நண்பர் சகாயம, அறிஞர் சந்திப்பு, காரியச் சித்தி.

கன்னி; புத்திரர் சிறப்பு, தொழில் மகிழ்ச்சி, விருந்துபசாரம்.

துலாம்: கைப்பொருள் நழுவல், கருத்துமுரண்பாடு, கவலை.

விருச்சிகம்: அதிகாரிகள் பகை, அவமதிப்பு, வைத்தியச் செலவு.

தனுசு: தொழில்விவகாரம், சோம்பல், மோலோர் சகாயம்.

மகரம்: பயணங்களால் சிரமம், காரியத்தடை, மனச்சுமை.

கும்பம்: தொழில் லாபம், கடித உறவு, வாதத் திறமை.

மீனம்; தெய்வீகச்செலவு, வீண்பகை, அனுவசியத் தலையீடு.

- ஜோஸ்யர்

# காயமடையும் புலிகளை பராமரிக்க நடவடிக்கை

[வட்டுக்கோட்டை]

போரில் காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள போராளிகளைப் பராமரிக்கும் சேவையில் யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச சபை, மாநகரசபை, பட்டினசபை, உபஅலுவலகம் ஆகியனவற்றில் கடமையாற்றும் ஊழியர்களும் சனசமூக நிலையங்களின் உறுப்பினர்களும் சேர்ந்துகொள்ளவுள்ளனர்.

போராளிகளைப் பாராமரிக்கும் சேவையில் சேர்ந்து கொண்டு சேவையாற்ற விரும்புவோரது பெயர் பட்டியல்கள் மேற்படி சபைகளின் பொறுப்பதிகாரிகளினால் தயாரிக்கப்பட்டு உள்ளூராட்சி ஆணையார் சு. டிவகலாலாவிடம்ஒப்படைக்கப்படவுள்ளன.

[139]

# கிராம'சேவையாளர் விபரம் திரட்டு

(சித்தன்கேணி)

யாழ். மாவட்டத்திலுள்ள சகல கிராமசேவை அலுவலர்களினதும் சகல விபரங்களும் திரட்டப்படுகின்றன.

வடக்கு-கிழக்கு மாகாண சபை உட்துறை அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் வ. வேலும்மயிலும் சகல உதவி அரசாங்க அதிபர்களுக்கும் கிராமசேவை அலுவலர்களின் சுய விபரங்களை திரட்டி அனுப்பி வைக்குமாறு சுற்று நிருபம் அனுப்பி வைத்துள்ளார். [137]

# யுத்த களத்திற்கு உணவுபொருள்கள்

(வடமராட்சி)

வடமராட்சியில் விடுகள் தோறும் உணவுப் பொட்டலங்களும், இளநீர்களும் யுத்த களத்திற்கு அனுப்புவதற்காக தயாராகவைககப்பட்ளன.

ஆனையிறவு, கட்டைக்காடு போன்ற இடங்களில் ஸ்ரீலங்கா இராணுவத்துடன் நடைபெற்றுவரும் போரில் ஈடுபட்டுள்ள போராளிகளுக்காகமேற்படி உணவுப்பொருட்களை இரவுபகல் பாராது வைத்துக்காத்துள்ளார்கள்.

மேலும் அவர்களுக்கு சாக்கு உரப்பை போன்ற பொருட்களையும் சேகரித்து போர்க் களத்திற்கு அனுப்பி வருகின்றார்கள். (51)

# கடவுச்சீட்டு படிவங்களுக்கு பெரும் தட்டுப்பாடு

(மானிப்பாய்)

கடவுச்சீட்டு விண்ணப்பப் படிவம், அவசரகால சாட்சிப் பத்திரம், கடவுச்சீட்டு புதிப்பித்தல் ஆகிய படிவங்களைத் தேடி யாழ். நகரில் மக்கள் கடை கடையாக அலைகின்றனர்.

முன்பு இப்படிவங்கள் யாழ். செயலகத்தில் இலவசமாக விநியோகிக்கப்பட்டு வந்தன. தற்போது இவை முடிவடைந்து பல மாதங்களாகியும் இங்கு வந்து சேராததால் மக்கள் தமது தேவைகளுக்கு இவற்றைத் தேடிக் குடாநாட்டிலுள்ள புத்தகசாலைகளுக்கு அலைந்து திரிவதைக் காண முடிகிறது. (71)

# காகிதாதியுடன் வருமாறு நோயாளருக்கு பணிப்பு

(மானிப்பாய்)

மானிப்பாயில் இயங்கும் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெறச்செல்பவர்கள் எழுதுவதற்குரிய காகிதங்களை கொண்டு வருமாறு பணிக்கப்பட்டுள்ளனர்.

இவ் வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் தினமும் ஐநூறுக்கும் அதிகமான நோயாளர்கள் சிகிச்சை பெறச்செல்கின்றார்கள். இவர்களுக்கு மருந்து எழுதுவதற்கு இவ்வைத்தியசாலையில் காகிதங்களிக்கு பலத்த தட்டுப் பாடு ஏற்பட்டுள்ளன.

மருந்து கட்டுவதற்கு பன்டேஜ், பிளாஸ்ரர் என்பன இல்லாத காரணத்திலும் மருந்து கட்டவருபவர்கள் துணியுடன் வருமாறு கேட்கப்பட்டுள்ளனர். அத்துடன் இவ்வைத்தியசாலையில் முக்கிய பல மருந்து வகைகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளன. (71)

# காங்கேசன் ம. வி. இடமாற்றம்

[யாழ்ப்பாணம்]

உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயத்தில் இயங்கி வந்த காங்கேசன்துறை மகாவித்தியாலயம் இன்று திங்கட்கிழமை தொடக்கம் இணுவில் சைவப்பிரகாச மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளன.

# நிவாரண உதவி

(யாழ்ப்பாணம்]

நெடுந்தீவு செஞ்சிலுவைச் சங்கக் கிளையின் பிரதிநிதிகள் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபருடன் தொடர்பு கொண்டதையடுத்து நெடுந்தீவுக்குச் செல்லமுடியாது தங்கியுள்ள சுமார் நூற்றி ஐம்பது பயணிகளுக்கு அகதிகளுக்கான புனர்வாழ்வு நிறுவனத்தினர் உலர் உணவுப் பொருட்களை நிவாரண உதவியாக வழங்கினர்.

# ராஜீவ் கொலை விசாரணை மற்றொரு கமிஷன்

[புதுடில்லி]

திரு. ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சதி நடந்தது பற்றி விசாரிக்க மற்றொரு கமிஷன் நியமிக்கப்படவுள்ளது.

இந்த விசாரணைக் கமிஷனின் அலுவல் வரம்பை விரிவாக்க அரசு கடமைப்பட்டுள்ளது என்று மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு செய்யமுடியாவிட்டால் சிறப்பு விசாரணைக் கமிஷன் இதை விசாரிக்கும் என்றும் அமைச்சர் கூறினார். [பூ]

# காவல் நிலையங்கள் தமிழகத்தில் நிறுவப்படும்

(சென்னை)

இலங்கைப் போராளிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் தமிழகத்தில் பதினொரு மாவட்டங்களில் கடலோரக் காவல் நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

இந்தக் காவல் நிலையங்கள் ஒவ்வொன்றிலும் இரு படகுகளும், போதுமான காவலர்களும் சேவையிலமர்த்தப்படவுள்ளார்கள்.

இதேவேளை தமிழகத்தில் தற்போது 34 இடங்களில் கண்காணிப்பு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன். தமிழ்நாடு சிறப்புக் காவல் படையின் 10 அணிகளும். மத்திய றிசேர்வ் 10 அணிகளும் கடலோரப் பகுதிகளில் ரோந்து சுற்றி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# சிப்பாயின் கழுத்தில் தாலிக்கொடி

(வேலணை)

வேலணை தெற்கு கடற்கரையில் கரையொதுங்கிய இரு கடற்படை சிப்பாய்களின் சடலங்களில் ஒருவரது கழுத்தில் 5 பவுண் தாலிக்கொடி கிடக்கக் காணப்பட்டது.

கடந்த வியாழன் மாலை வந்தடைந்த இவ்விரு சடலங்களும் பின் பொதுமக்களால் வட்டவை தலைவரின் உதவியுடன் அடக்கம் செய்யப்பட்டது.

தாலிக்கொடி தற்போது வட்டவை தலைவரின் பாதுகாப்பில் வைககப்பட்டுள்ளது. [75]

# "போர்க்கால உதவிவழங்க தயாராக சகல உறுப்பினரும் இருக்கவேண்டும்"

— ச. ச. நி. சமாஜம்

(உடுவில்)

தற்போதைய விடுதலைப் போராட்டத்துக்கு வேண்டிய பதுங்குகுழிகளை அமைத்துக் கொடுக்கவோ, அதற்கான ஆட்பல உதவிகளை, உபகரண உதவிகளை வழங்கவோ எமது உறுப்பினர்கள் சகலரும் ஆயத்தமாக இருக்கவேண்டும் என வலிகாமம்-தெற்கு பிரதேச சபை சனசமூக நிலைய சமாசங்கள் தீர்மானித்துள்ளன.

வலிகாமம்-தெற்கு உடுவில் உப அலுவலகத்தில் நடைபெற்ற மேற்படி சங்கத்தின் போர்க்கால நடவடிக்கைகளுக்கான கலந்துரையாடலின் போது இவ்வாறு தீர்மானம் செய்யப்பட்டது.

யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சு. டிவகலாலா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகப் பிரதிநிதிகள், வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் சுன்னாகம், உடுவில், ஏழாலை உப அலுவலகங்களின் பொறுப்பதிகாரிகள். சனசமூக நிலைய சமாசத் தலைவர்கள், பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

மறு அறிவித்தல் வரை தினமும் காலையில் ஒரு மணி நேரம் வரை சங்க அங்கத்தவர்கள் ஒன்று கூடி. தினசரி சனசமூக நிலையங்களினால் செய்யப்பட்ட போர்க்கால வேலைகள்; உதவிகள் பற்றி ஆராய்வதும், அறிக்கைகள் தயாரிப்பதும் எனவும், பத்திரிகைகள். புலிகளின் குரல் வானொலி மூலமும் விடுக்கப்படும் கோரிக்கைகளுக்கேற்பச் செயல்படுவதெனவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் போதியளவு இரத்ததானம் செய்வதற்கான சகல உதவிகளையும் வழங்கவேண்டும் எனவும், தற்போது அவசியம் தேவைப்படும் தலையணை, மெத்தை விரிப்புக்கள், கட்டில்கள் ஆகியவற்றைச் சேகரித்து வழங்கவும் தீர்மானிக்கப்பட்டது. [109]

# அதிபர்பதவியுயர்வு நேர்முகப் பரீட்சை

(வட்டுக்கோட்டை)

சேவை மூப்பு, திறமைஅடிப்படையில் 2-ம், 3-ம் தர அதிபர்களைப் பதவி உயர்த்துவதற்கான நேர்முகப் பரீட்சையொன்று வெகு விரைவில் கல்விச்சேவைக் குழுவினால் நடாத்தப்படவுள்ளது.

3 வருடங்களாகத் திருப்திகரமாகச் சேவையாற்றிய 3-ம் தர நிரந்தர அதிபர்கள் 2-ம் தரத்திற்கும் 5 வருடங்கள் திருப்திகரமாகச் சேவையாற்றிய 2ம் தர நிரந்தர அதிபர்கள் 1-ம் தரத்திற்கும் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. [139)

# தொழுநோய்'ஆய்வு நடத்த ஏற்பாடு

(பண்டத்தரிப்பு)

மல்லாகம் கல்லாரைக் கிராமத்தில் சுகாதாரப் பகுதியினரால் தொழுநோய் ஆய்வு எதிர்வரும் ஆகஸ்ட் 3-ம் திகதியன்று நடாத்தப்படவுள்ளது.

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஸ்ரீகாந்தா தலைமையில் நடைபெறவுள்ள இந்த ஆய்வில் பொது சுகாதாரப் பரிசோதகர், குடும்பநல சேவையாளர் ஆகியோருடன் பயிற்சி பெற்ற 40 சுகாதாரத் தொண்டர்களும் இணைந்து செயற்படுவார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

**வரணியில்**

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள வரணி இரத்ததாலை கிராமத்தில் தொழு நோய் பற்றிய ஆய்வு வீட்டுக்கு வீடு ஆகஸ்ட் மாதம் 1-ம் திகதி வியாழக்கிழமையன்று மேற்கொள்ளப்படவுள்ளது.

பயிற்சி பெற்ற 20 சுகாதார தொண்டர்களின் உதவியுடன் இந்த ஆய்வ மேற்கொள்ளப்படவுள்ளது. (72)

## சைக்கிள் திருட்டு

[கொக்குவில்]

கொக்குவில் மேற்கு ஆனைக்கோட்டை வீதியைச் சேர்ந்த பொ. பரஞ்சோதி என்பவரின் வீட்டில் நள்ளிரவில் திருடர் புகுந்து மூவாயிரம் ரூபா பெறுமதியான சைக்கிள் ஒன்றை திருடியுள்ளார்கள் இத்திருட்டுப்பற்றி புலிகளிடம் முறையிட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

# ★ நல்லூர், திருநெல்வேலியிலுள்ள உணவு விடுதிகள், பேக்கரி தேநீர்சாலைகள் பரிசோதனை!

[பண்டத்தரிப்பு]

திருநெல்வேலி, நல்லூர் ஆகிய பகுதிகளிலுள்ள தேநீர் சாலைகள், உணவு விடுதிகள், பேக்கரிகள் ஆகியவற்றில் யாழ். மாவட்ட உணவு மருந்து பரிசோதகர் திரு. ரி. மகாதேவன் தலைமையிலான பரிசோதனைக் குழுவினர் கடந்த வாரம் திடீர் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

இவற்றின் சுகாதார விதிகளுக்கு முரணான விதத்தில் செயல்பட்ட உணவுச்சாலைகளிலும், தேநீர்க் கடைகளிலும் அவற்றைத் திருத்தி நிவாத்தி செய்வதற்கு அவகாசம் வழங்கப்பட்டது. குறிப்பிட்ட கால எல்லைக்குள் சுகாதாரக் குறைபாடுகளை நீக்காத உணவுச்சாலைகள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்று எச்சரிக்கை செய்யப்பட்டது.

திருநெல்வேலிச் சந்தையில் உள்ள இறைச்சிக் கடை ஒன்றில் பரிசோதிக்கப்பட்டு முத்திரையிடப்படாத நிலையில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த இறைச்சியும் இந்தப் பரிசோதனையின்போது கண்டு பிடிக்கப்பட்டது.

கோப்பாய் சுகாதாரப் பரிசோதகர் திரு. எஸ். வர்ணநாதன், நல்லூர் சுகாதாரப் பரிசோதகர் திரு. ஐ. இராசசிங்கம் ஆகியோரும் இந்தப் பரிசோதனைக் குழுவில் இடம் பெற்றிருந்தனர். (72)

# க. பொ. த. உயர்தர பரீட்சை முடிவுகள் வெளியாகவில்லை

(யாழ்ப்பாணம்)

கல்விப் பொதுத் தராதர உயர்தர விசேட பரீட்சை 1990க்கான முடிவுகள் பரீட்சைத் திணைக்களத்திலிருந்து இன்னும் வெளியாகவில்லை என்று கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் திரும்பிய கல்வி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது; இப்பரீட்சைக்கான சங்கீதம், மனைப் பொருளியல் பாடங்களுக்கான செயல்முறைப் பரீட்சைகளும் இன்னும் முடியவில்லை. கல்விப் பொதுத்தராதர உயர்தர 1991க்கான பரீட்சை முடிவுற்றபின்புதான் 1990 கல்விப் பொதுத் தராதர உயர்தர விசேட பரீட்சைக்கான பெறுபேறுகள் வெளியாகலாம். (152)

## மாணவர் தெரிவு கடிதங்கள்

(கொழும்புத்துறை)

புதிதாகப பல்கலைக்கழகங்களுக்கு 1990 - 91 ஆம் கல்வியாண்டுக்குத் தெரிவாகியுள்ள மாணவர்களுக்கான தெரிவுக் கடிதங்கள் இன்றுவரையும் கிடையாதவர்கள் தங்கள் பகுதித்தபால் நிலையங்களுடன் நேரில் தொடர்புகொள்ளுமாறு தபாற்பகுதியினர் தெரிவித்துள்ளனர். (154)

## தீயவர் படைகள் வீழும்!

கொக்காவில் களத்தை வென்றோர் யாழ்
கோட்டையைப் பொடி செய் தீரர்
தப்பாமல் மாங்குளத் தில்
தமிழ்க் கொடி ஏற்றி வைத்தோர்
இப்போது ஆனை யிறவை
இறுகவே பற்றி நிற்கத்
திக்கியே திணறித் தவிக்கும்
தீயவர் படைகள் வீழும்!

படைகளை இறக்கி விட்டால்
பணிந்திடும் புலிகள் என்று
எடையிட்ட வீணர் கூட்டம்
ஏங்கியே திகைக்கக் காண்போம்
விடையொன்று உண்டு எந்த
வினவுக்கும்; இந்தப் போரில்
தடையில்லை தமிழர் வீரம்
தரணியே புரியும்; போற்றும்!

சிங்களன் இனியும் தமிழர்
சேனையை எதிர்கொண் டிங்கே
செங்களம் ஆட எண்ணுன்
''செத்தனே புத்தர்'' என்பான்
எங்கேனும் வானில் ஊர்ந்து
ஏழைக்குக் குண்டு வீசி
அங்குள புலிகளை யாம்
அழித்தனன் என்பான் பாவி!

- இரி

## வேலணையில் இயங்க ஏற்பாடு

(வேலணை)

ஊர்காவற்றுறைப் பகுதி உதவி அரசாங்க அதிபர் காரியாலயம் அடுத்த மாதம் முதல் வேலணைப் பகுதியில் இயங்கவிருக்கின்றது.

இவ்வாறு இயங்கவிருக்கும் உதவி அரசாங்க அதிபர் காரியாலயம் தொடர்ந்தும் ஐந்து தினங்கள் வேலணையில் இயங்கி வந்தாலும் காரைநகர் மக்களினதும் சேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக செவ்வாய், வியாழக்கிழமைகளில் சங்கானையிலும் திங்கள். புதன் கிழமைகளில் வேலணையிலும் இயங்கவிருக்கிறதாம், வெள்ளிக்கிழமைகளில் உதவி அரசாங்க அதிபர் கச்சேரிக்கும் செல்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளனவாம்.

# வடமராட்சி கிழக்கில் இடம்பெயர்ந்தவர்களுக்கு இரு முகாம்கள்

[பருத்தித்துறை]

வடமராட்சி கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்து வந்துள்ள அகதிகளுக்கென கற்கோவளத்திலும் வல்லிபுரத்திலும் வடமராட்சி வடக்கு மேற்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் இரு முகாங்களை அமைத்து இடம் பெயர்ந்தவர்களுக்கு உதவி வருகின்றது.

கற்கோவளத்தில் ஐஸ் தொழிற்சாலையிலும், வல்லிபுரத்தில் வல்லிபுரக் கோவில் மடத்திலும் இம்முகாம்கள் அமைந்துள்ளன இம்முகாம்களில் சுமார் 150 குடும்பங்கள் தங்கியுள்ளன. இவர்களுக்கு வேண்டிய உணவுப் பொருட்கள், பாத்திரங்கள் என்பனவற்றையும தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வழங்கியுள்ளது.

இம்முகாம்களிலும், வீடுகளிலும் தஞ்சமடைந்துள்ள அகதிகளுக்கு செஞ்சிலுவைச் சங்கமும் உதவிகளை வழங்கி வருகின்றது. இம் முகாம்களிலுள்ளவர்கள் தமது உலர் உணவு அட்டைகளைக் காண்பித்து வடமராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்கத்தின் கிளைகளான குடத்தனை. அம்பன், நாகர்கோவில் கிளைகளில் உலர்கூணவுகளைப் பெற்றுக் கொள்ளலாமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (52)

# போராளிகளுக்கு சகல வழிகளிலும் பங்களிப்பு செய்ய வேண்டும்

## - டிவகலாலா

[வட்டுக்கோட்டை]

''இன்றைய சூழ்நிலையைச் சாதகமாக்கொண்டு பெருந்தொகையான பணத்தைச் சம்பாதிப்பதற்காக பலர் வெளிநாடுகளுக்கு ஓடுகிறார்கள். சுயநலநோக்கோடு வெளிநாடுகளுக்கு ஓடுகிறவர்களை விடுத்து நம்நாட்டைக் காப்பாற்றுவதற்காக தமிழீத்தை வென்றெடுப்பதற்காகப் போரிலே ஈடுபட்டிருக்கும் போராளிகளுக்கு நாம் சகல வழிகளிலும் மனப்பூர்வமாக பங்களிப்புச் செய்ய வேண்டும்''

யாழ்: இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெறற கருத்தரங்கொன்றில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சு. டிவகலாலா மேற்கண்டவாறு கூறினார்.

யாழ் மாவட்டத்திலுள்ள சகல பிரதேச சபைகள், நகர சபைகள், உப அலுவலகங்களின் ஊழியர்களுக்கும் சனசமூக நிலையங்களின் உறுப்பினர்களுக்குமான கருத்தரங்கிலேயே திரு டிவகலாலா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றும் போது ''இதுவரை ஆனையிறவில் நடைபெற்ற போர் ஆரம்பப்போர் இனித்தான் உண்மையான உக்கிரமமான போர் நடைபெறப் போகின்றது இப்போறை அடுத்துச் காயப்படப்போகும் போராளிகளுக்கு பராமரிப்புச் சேவை செய்ய வேண்டிய பொறுப்பு எமக்கெல்லோருக்கும் உண்டு. எமது போர் எமது மக்களின் போர் என உணர்ந்து நாம் அனைவரும் செயற்பட வேண்டும் என்றார். [139]

# துணைப்படையில் சேர பலர் முன்வந்தனர்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் துணைப் படைப் பிரிவில் சேருமாறு விடுத்த வேண்டுகோளுக்கு இணங்கப் பல இடங்களிலும் இருந்து ஆண்கள் பெண்கள் வயோதிபர்கள் யுத்தமுனையில் பல்வேறு பணிகளிலும் ஈடுபட, பயிற்சியைப் பெற்றுக் கொள்ள ஆயிரக்கணக்கில் நேற்று கோண்டாவில் தலைமைக் காரியாலத்தில் வந்திருந்தனர்.

ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளில் இருந்தும ஆசிரியர்களும், அதிபர்களும் வந்திருந்தனர்

உற்சாகம் மேலிடத் தங்களை உடனடியாகப் பயிற்சிக்கு விடுமாறு பலர் வேண்டியதோடு, ஆயத்த நிலையிலும் வந்திருந்தனர். (பூ)

# குவைத் எண்ணெய் ஏற்றுமதி மீண்டும் ஆரம்பம்

[பாரேன்]

குவைத் நேற்று முதலாக வெளிநாடுகளுக்கு அதன் எண்ணை ஏற்றுமதியை மீண்டும் ஆரம்பித்துள்ளது.

ஈராக், குவைத்தை ஆக்கிரமித்து ஏழுமாதங்களாக தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த காலத்தில் குவைத்தின் 750 எண்ணை வயல்களை எரித்து நாசமாக்கியது. இதனால் குவைத்துக்கு 7,500 கோடி அமெரிக்க டொலர்கள் நஷ்டம் ஏற்பட்டது.

குவைத் நேற்று முதன் முதலாக ஏற்றுமதி செய்யப்பட்ட மசகு எண்ணையின் பெறுமதி நாலுகோடி அமெரிக்க டொலர்களாகும். ]வி]

# தமிழகத்தில் புதிய கடற்படைப் பிரிவுகள்

[சென்னை]

இலங்கைத்தமிழ்ப்போராளிகளின் நடவடிகைகைகளைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் தஞ்சாவூர் மாவட்டத்தில் ஐம்பது கடற்படைப் பிரிவுகள் அமைக்கப்படவுள்ளன.

புதுக்கோட்டைக்கு அருகே மல்லிப்பட்டினத்திலும் கோடிக்கரை, தோப்புத்துறை ஆகிய இடங்களிலும் மேலதிகமாக மூன்று கடற்படைப் பிரிவுகள் அமைக்கப்படவுள்ளன.

புதிய கடற்படைப் பிரிவுகளை அமைப்பது தொடர்பாக கடற்படையின் உயர் அதிகாரிகள் இங்குள்ள பல இடங்களைப் பார்வையிட்டனர்.

## வேண்டுகோள்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்திலுள்ள சிற்றூரவை தலைவர்களையும், செயலாளர்களையும் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு கோண்டாவிலிலுள்ள விடுதலைப் புலிகள் தலைமைச் செயலகத்தில் நடைபெறும் முக்கிய கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## மக்கள் அஞ்சலி

[நாவற்குழி]

கட்டைக்காடு நேரடிமோதலின் போது வீரமரணத்தைத் தழுவிக்கொண்ட வீரவேங்கை மோகனின் [பொன்னம்பலம் தமிழழகன், நாவற்குழி கிழக்கு] புகழுடம்பு மக்கள் அஞ்சலிக்காக நாவற்குழி மகா விததியாலய மண்டபத்தில் வைக்கப்பட்டது இப்புகழுடலுக்கு மக்கள் பெருமளவில் அஞ்சலிசெலுத்தினர்கள். (107)

# கோயம்புத்தூர் குண்டுவெடிப்பில் இல. இளைஞர் இருவர் பலி

(சென்னை)

கோயம்புத்தூரில் நேற்றுக் காலை ஒருவீட்டில் குண்டு வெடித்தபோது ஈழத்தமிழ் இளைஞர்கள் என்று சந்தேகிக்கப்படும் இருவர் கொல்லப்பட்டனர்.

இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது: ஈழத்தமிழ் இளைஞர்கள் என சந்தேகிக்கப்படும் இருவரைப் பிடிப்பதற்காகப் பொலிஸார் நேற்றுக் காலை கோயம்புத்தூரில் ஒரு வீட்டுக்குள் நுழைந்தபோது, அந்த வீட்டுக்குள் இருந்த குண்டு வெடித்ததில் அந்த இரண்டு இளைஞர்களும் படுகாயங்களுக்குள்ளாகி இறந்துவிட்டதாக நேற்றுச் சென்னைப் பொலிஸ் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார். (மா)

## வீரவணக்கம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நியூட்டன் பண்டத்தரிப்பு), உமாசங்கர் [சின்னமணி செஞ்சியஸ் குருநகர், வர்மன் (சுந்தரமூர்த்தி பாஸ்கரமூர்த்தி வாழைச்சேனை), சிகிலா (ரஞ்சினி நடராசா சுழிபுரம், கார்த்திகா (ரமணி ராஜரத்தினம் நாவந்துறை). ஆகியோரின் புகழுடல்கள் மக்கள் அஞ்சலிக்காக நேற்று திருநெல்வேலிமுத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் வைக்கப்பட்டு அங்கு நடைபெற்ற அஞ்சலிக்கூட்டத்தில் திரு. தேவர் அண்ணா, ரஞ்சன் மாஸ்ரர், தனபால். பாரதி ஆகியோர் அஞ்சலி உரை நிகழ்த்தினார்கள் பின்னர் கோப்பாய் மாவீரர் மயானத்தில் வீரவேங்கைகளின் புகழுடல்கள் தீயுடன் சங்கமாகியது. [மா)

## போர் விமானங்கள்

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

மதியற்ற நிலையிலும், இரவு நேரத்தில் நித்திரையின்றியும் அவதிப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக குழந்தைகள் விமானங்களின் இரைச்சலினால் மிகவும் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் நெஞ்சுவலி நோயாளிசள் பலர் அவஸ்தைப்படுவதாகவு தெரிவிக்கப்பட்டது. (56)

## மீண்டும்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளையில் வவுனியாவிலிருந்து வடக்கு நோக்கி எந்த வித வாகனமும் செல்ல அனுமதிக்கப்பட மாட்டாதென்றும் நேற்று அறிவிக்கப்படடது. கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்கனவே ஊரடங்குச்சட்டம் அமுலில் உள்ளது குறிப்பிடத்தக்கது. (மா)

## வவுனியா

(1ம் பக்கத் தொடர்ச்சி)

படுகிறது.

அங்கு நிற்கும் பொதுமக்களையும், உத்தியோகத்தர்களையும் வவுனியா நகருக்குச் செல்லவிடாது பலமணி நேரமாகத் தடுத்துவைப்பது பொருட்களை கொண்டுவராமல் தடுப்பது, இளவயதினரை தாக்குவது போன்ற நடவடிக்கைகளை படையினர் மேற்கொள்வதாக அங்கிருந்துவந்த ஒருவர் தெரிவித்தார். [56

## ஆனையிறவு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஆனையிறவுப் போர் பற்றி அவர் மேலும் தெரிவித்திருப்தாவது:

கட்டைக்காட்டுப் பகுதியில் இருந்து ஆனையிறவு முகாமை நோக்கி முன்னேற முயலும் இராணுவத்துக்கு, விடுதலைப் புலிகள தமது கடும் எதிர்ப்புக்களைக் காட்டிவருகின்றனர்.

நிலக் கண்ணிவெடிகள் வைப்பதில் பிரசித்திபெற்றவர்களான விடுதலைப் புலிகள், கட்டைக்காடு, வெற்றிலைக்கேணிப் பகுதிகளில் பெருமளவு கண்ணிவெடிகளைப் புதைத்து வைத்துள்ளனர்.

இவற்றைத் தாண்டி இராணுவம் முன்னேறுவதில் சற்றுத் தாமதம் ஏற்பட்டுவருகின்றது. விடுதலைப் புலிகளுக்கு எதிராக நாம் நடத்தும் மிகப் பெரிய போர் இதுதான் என்றும், ஆனையிறவுப் பகுதிகளில் இராணுவத்தினரின் தாக்குதல்களைத் திசை திருப்புவதற்கே, விடுதலைப் புலிகள் தற்போது கிழக்கு மாகாணத்தில் தமது தாக்குதல்களை முடுக்கிவிட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (வி)

## வடபகுதி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தாக பி. பி. ஸி. தெரிவித்தது.

ஆனையிறவு யுத்தம்பற்றி தென்னிலங்கையில் பலவிதமான வதந்திகள் பரவிவருகிறது.

ஜூலை 14ம் திகதி கட்டைக்காட்டில் தரையிறங்கிய இராணுவத்தினர் புலிகளின் கடுமையான தாக்குதல் காரணமாக யுத்தமுனையில் முன்னேறுவதற்கு அச்சம் தெரிவித்துள்ளதாக கொழும்பில் பொதுமக்களிடம் வதந்தி அடிபட்டது.

இப்படியான நேரத்தில் அரசு சரியான தகவல்களை தெரிவிக்காவிட்டால் தென் பகுதியில் பதற்றம் ஏற்படும் வாய்ப்பு உண்டெனத்தெரிவிக்கப்படுகிறது.

ஆனையிறவு முகாமின் முக்கிய காவலரண்களில் கடமைகளில் ஈடுபட்டுள்ள இராணுவத்தினரை கட்டாயம்மாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது, முற்றுகையிடப்பட்ட காலகட்டங்களில் இராணுவத்தினர் உளரீதியாகவும் உடல்ரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். காவலரண்கள் பலவீனமுற்ற நிலையில் இருக்கின்றன. இந்த இராணுவத்தினரை எப்போது மாற்றி அமைக்கமுடியுமோ தெரியாதென கொழும்பிலுள்ள இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளையில் நேற்றுமுன் தினம் புலிகளின உள்ளூர்த் தயாரிப்பான 'பசிலன்' மூலம் கடுமையான தாக்குதலை புலிகள் ஆரம்பித்ததாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

வடமாகாணத்தில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள போதிலும் அதனால் விடுதலைப்புலிகளுக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படவில்லையென்று அந்த இராணுவ அதிகாரி தெரிவித்ததாக பி. பி. ஸி. தெரிவித்தது. (மா)

## சாளரம்

[யாழ்ப்பாணம்]

சாளரம் ஆகஸ்ட் மாத இதழ் வெளியாகியுள்ளது. இந்த இதழில் தமிழர் பாரம்பரிய கல்வி நிறுவனங்கள், ஒரு கவிஞனின் தீர்க்கதரிசனம், ஆனையிறவுத் தளம் மீதான தாக்குதல் உட்படப் பல்வேறு விடயங்கள் இந்த இதழில இடம்பெற்றுள்ளன.

## நீடிப்பு

[வட்டுக்கோட்டை]

யாழ். சைவ பரிபாலனசபையினரால் அகில இலங்கை ரீதியில் நடாத்தப்படும் சைவ சமயபாடப் பரீட்சைக்கான விண்ணப்ப முடிவு ஆகஸ்ட் மாதம் 9-ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

## படை உயரதிகாரி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருந்த அதிரடிபபடை மீது இத்தாக்குதல் நடாத்தப்பட்டது. இதில் உயர் அதிகாரி ஒருவர் கொல்லப்பட்டார். 9 அதிரடிப்படையினர் படுகாயமடைந்தனர்.

நேற்றுமுன்தினம் மட்டக்களப்பு களுவான்கேணியில் இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதலில் 8 படையினரும், ஒரு ரெலோ உறுப்பினரும் கொல்லப்பட்டதும் தெரிந்ததே. (சி)

## கிழக்குப்பகுதியில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஆனையிறவு மோதலைத் திசை திருப்பவே இவ்வாறு புலிகள் படை முகாம்கள் மீது திடீர்த் தாக்குதலை நடத்தலாமெனப் பாதுகாப்பு அமைச்சு படையினருக்கு மேலும் பலத்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

குறிப்பாக மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலேயே புலிகளின் தாக்குதல் இடம்பெறலாமென எதிர்பார்க்கப்படுவதால் இப்பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (சி)

## வெற்றிலைக்கேணி-கட்டைக்காடு மக்கள் மாதகலில் தஞ்சம்

(பண்டததரிப்பு)

வெற்றிக்கேணி, கட்டைக்காடு பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையை அடுத்து வெற்றிலைக்கேணியை சேர்ந்த குடும்பங்கள் 27 மைல் தூரம் நடந்து வந்து மாதகலில் உள்ள தங்கள் உறவினர்கள் வீடுகளில் தஞ்சமடைந்துள்ளன.

இவர்களது உடைமைகளும் வீடுகளும் இராணுவத்தினரால் நாசம் செய்யப்பட்டுள்ளதாகவும். சில வீடுகள் விமான குண்டு வீச்சினால் முற்றாக சேதமடைந்து விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (72)

## உக்கிர

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வினர்கள் விரக்தியடைந்த நிலையில் காணப்படுகின்றனர்.

யுத்த முனையில் நிற்கும் தமது கணவன் மற்றும் பிள்ளைகள் பற்றி அறிவதற்கு ஆவலுடன் படையினரின் பெற்றோர்கள், மனைவியர்கள் பல இடங்களுடன் தினமும் தொடர்புகொண்டு வருகின்றனர்.

தென்பகுதியிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாணசபை உறுப்பினர்கள், அமைச்சர்கள் வீடுகளில் படையினரின் உறவினர்களின் முற்றுகை அதிகரித்து வருகிறது.

படையினர் நிலைபற்றி எதுவும் தெரிவிக்கமுடியாத நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர்களும் பெரும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர்-

## ஆகஸ்ட் முதல் தனியார் பாதுகாப்பு சேவை

யாழ்ப்பாணம்)

ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதியிலிருந்து யாழ் போதனா வைத்தியசாலையில் தனியார் பாதுகாடபு சேவையினர் கடமைபுரிவதால், அடையாளம் காணுமுகமாக சகல ஊழியர்களையும் தங்களது அடையாள அட்டைகளை அணிந்துகொள்ளும்படி பணிப்பாளரினால் வேண்டப்பட்டுள்ளது. (56

## அரபாத் விருப்பம்

[கெய்ரோ]

''பலஸ்தீனியர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு செவிமடுத்து இஸ்ரேல் பேச்சுவார்த்தை நடாத்த முன்வருமாகில், நாமும் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளத் தயாராக இருக்கின்றோம்.'' இவ்வாறு பலஸ்தீனிய விடுதலை இயக்கத்தின் தலைவர் யாசீர் அரபாத் நேற்று கெய்ரோவில் தெரிவித்தார்.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 66-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஜூலை 29ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under license Number B/186386/81